[திரு. உ.ரா. வரதராசன்] [1990 ஆகஸ்டு 22

என்பது தொழிலாளர் துறை ஆணையாளர் முன்னாலே போடப் பட்டிருக்கக் கூடிய, புனிதமானது என்று சொல்லப்படக் கூடிய ஒப்பந்தத்தையே முதலாளி தன்னிச்சையாக, எந்த பாதிப்பும் இல்லாமல் மீறுகிறபொழுது இதை பார்த்துக் கொண்டு இருப்பது சரியல்ல என்கின்ற முறையிலே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

அதோடு கூட, அந்த பி.ஐ.எப்.ஆர். நிறுவனம் ஒரு கட் டத்திலே இந்த ஆலையை மூடிவிடுவதற்காக, கம்பெனியையே லிக்விடேஷன் செய்வதற்காகத்தான் இனிமேல் நாங்கள் நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவித்தது அந்தத் தொழி லாளர்களுடைய குடும்பங்களுக்கு ஒரு பேரதிர்ச்சியாக அமைந் திருக்கக் கூடியதாகும். அந்த முறையிலே தமிழக அரசு தன் னுடைய பொறுப்புக்கு 3 கோடி ரூபாய் தர முன் வந்தும் கூட, அந்த ஆலையைத் திறக்க மறுக்கிற அந்த ஆலை முதலாளி மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு வேறு வழியில்லை என்று சொன்னால் அரசே ஏற்று இந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கும் நடத்துவதற்கும் முன் வர வேண்டுமென்ற வேண்டு கோளை விடுத்து, இது சம்பந்தமாக பல்வேறு பிரச்சினைகளை யும் விரிவாகப் பேச வேண்டிய அவசியம் இருக்கிற கார ணத்தினால் அவையினுடைய இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து இந்தத் தீர்மானத்தை அனுமதித்து, இதன் மீது விவாதத்தை அனுமதிக்குமாறு தங்களைப் பணிவன்போடு கேட்டு, அமர்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் மிகவும் நலிவுற்றபடியால் மத்திய அரசின் தொழில் மற்றும் நிதி சீரமைப்புக் குழுவினரால் பதிவு செய்யப்பட்டு 9-12-1988 அன்று நலிவுற்ற நிறுவனம் என்று அறிவிக்கப்பட்டது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி— ஐ.டி.பி.ஐ.--இதன் செயல் முனைவராக நியமிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்த நிறுவனத்தின் நிர்வாகம் கைமாறி திரு. ஏ.சி. முத்தையா இந்த நிறுவனத்தின் தலைவராகப் பொறுப் பேற்றார். தொழிலாளர்களுடன் தொடர்ந்த பேச்சு வார்த் தைக்குப் பின்னரும் ஒரு நல்ல முடிவு ஏற்படாததால் நிர்வாகம் இந்நிறுவனத்தின் செயலாக்கத்தை 7-2-1989 முதல் நிறுத்தி வைத்தது.

10.45 மணி

தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழு தொடர்ந்த பல விசாரணைகளுக்குப் பிறகு 26-2-1990 அன்று அதன் பெஞ்ச் விசாரணையில் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் இந்த நிறுவனத்துக்கான புனரமைப்புத் திட்டத்தை மாற்றம் செய்து தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்படி இந்திய தொழில் வளர்ச்சி வங்கி இந்த நிறுவனத்துக்கான புனரமைப்பு

மற்றும் புதுமைப்படுத்தும் ஒரு திட்டத்தைக் கொடுத்து அந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அது குறித்த யோசனைகளையும், திருத்தங்களையும் தெரிவிக்குமாறு கேட்டு அனுப்பப்பட்டது. 26–6–1990 அன்று தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழு மீண்டும் விசாரணை நடத்தியது. புனரமைப்புத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தன்னால் 4.13 கோடி ரூபாய் தருவதற்கு இயலாது என்றும், 2 கோடி ரூபாய் மாத்திரம் தருவதற்கு இயலும் என்றும் திரு. ஏ.சி. முத்தையா தெரிவித்தார். இந்த நேரத்தில் மாநில அரசும் தன்னால் ரூபாய் 3 கோடி அளவுக்கு மானியமோ அல்லது கடனோ வழங்க இயலும் என இறுதியாகக் கூற முடியவில்லை. 6–7–1990 அன்று நானும், தலைமைச் செயலாளரும், நிதித் துறைச் செயலாளரும் மற்ற அதிகாரிகளையும் அழைத்து இது குறித்துப் பேசியதற்குப் பின் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனத்திற்காக 3 கோடி ரூபாய் அளவுக்கு அரசின் சார்பில் முன் பணமாக வழங்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. இந்த முடிவு இந்தத் தொழிலாளர் பிரச்சினைக்காக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த தோழர் ஏ.எம். கோபு அவர்களுக்கும் என் மூலம் கடிதமாகத் தெரிவிக்கப்பட்டு அவரின் உண்ணாவிரதத்தை நிறுத்துவதற்கும் அந்த முடிவு அடிப்படையாக அமைந்தது. மேலும் இந்த முடிவானது தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழுவுக்கும், திரு. ஏ.சி. முத்தையா அவர்களுக்கும் தொலையச்சு மூலமாகவும், கடிதம் மூலமாகவும் உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது. இது குறித்த தனது கருத்தை திரு. ஏ.சி. முத்தையா அவர்கள் இன்னும் தெரிவிக்கவில்லை.

பி.ஐ.எஃப்.ஆர். அதாவது தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழு இந்த நிறுவனத்திற்கு புதிய முனைவர் ஒருவரைக் கண்டு பிடிக்குமாறு ஆலோசனை வழங்கி இருந்தது. விருப்பம் உடைய பல தொழில் முனைவர்களோடு அரசாங்கம் இது குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தியது. பின்வரும் தொழில் அதிபர்கள் இதிலே ஆர்வம் காட்டினார்கள்: —

(1) விஜய் மல்லய்யா — யு.பி. க்ரூப்.

(2) ஜே. வி. பட்டேல் — இங்கிலாந்தில் வாழும் இந்தியர். தலைவர், ஏ.ஏ.ஜி. ஹோல்டிங்ஸ் லிமிடெட்.

(3) திரு. சகாணி, ஆர். ஜே. — அசோக் லேலண்ட்.

(4) ரவி புருஷோத்தமன், காந்தி வெங்கடபதி இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட்.

(5) திரு. பழனிச்சாமி, சேரன் க்ரூப் ஆஃப் கம்பெனி.

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஆகஸ்டு 22

இந்தத் தொழில் முனைவர்களுடன் தமிழக அரசு இப்போது ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கிறது. நான் தெரிவித்த முதல் மூன்று தொழில் முனைவர்களும் மிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். தற்போதுள்ள புனரமைப்புத் திட்டத்திற்கு திரு. ஏ.சி. முத்தையா அவர்கள் ஒத்து வராவிட்டால் மேற் குறிப்பிட்ட திட்டம் குறித்து மத்திய அரசின் தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழுவிடம் இந்தப் பிரச்சினையைத் தமிழக அரசு எடுத்துச் செல்லும். இது குறித்து திரு. ஏ.சி. முத்தையா அவர்களிடம் இருந்து இறுதி முடிவைத் தெரிந்து கொள்வதற் காக தலைமைச் செயலாளர் அவர்கள் இன்று ஒரு கூட்டத்தைக் கூட்டி இருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இடையிலே மூன்றாயிரத்து முப்பத்து ஆறு தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணமாக தலா 200 ரூபாயும், நிவாரணம் பெறாது விடுபட்ட 50 தொழிலாளர்களுக்கு அடுத்த உத்திரவுப்படி தலா 200/- ரூபாய் வீதமும் வழங்கப்பட்டது என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். எவ்வளவு விரைவில் ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற் சாலை பிரச்சினை தீர்ந்து தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறையோடு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே 3036 தொழிலாளர்களுக்கு முதல் தடவையாக 200 ரூபாயும், விடுபட்ட 50 தொழிலாளர்களுக்கு இரண்டாவது உத்திரவு மூலம் 200/- ரூபாயும் அந்த 3086 தொழிலாளர்களுக்குத் தரப்பட்டது போல் இப்போதும் இங்கே இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்ட பின்னர் இந்தப் பிரச்சினையில் அந்தத் தொழிலாளர் களின் தேவையான வாழ்வை எண்ணி அந்த 3086 தொழிலாளர் களுக்கும் தலா ரூபாய் 250 வீதம் நிவாரணம் அளிக்க இந்த அரசு முன்வருகிறது என்பதையும் அதற்கு சுமார் 7½ இலட்சம் ரூபாய் செலவாகும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசுக்கு இதிலே மிகுந்த அக்கறை இருக் கின்றது என்ற காரணத்தால் இதிலே அக்கறையுடன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இதை மேலும் வலியுறுத்தமாட்டார் கள் என்று நம்பி இந்த அளவில் என்னுடைய கருத்தை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச் சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை யில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.